மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

மகப்பேறு மருத்துவமனை

***3532—திரு. வாகை சந்திரசேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளச்சேரி தொகுதி, சேவா நகரிலுள்ள மகப்பேறு மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின்கீழ் மண்டலத்திற்கு 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனை என்ற அடிப்படையில் அடையார் மண்டலத்தில், எண் 2, வெங்கட்டரத்தினம் நகர், அடையாறு, சென்னை என்ற முகவரியில் 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனை செயல்பட்டு வருவதால், வேளச்சேரி, சேவா நகரில் உள்ள நகர ஆரம்ப சுகாதார மையத்தை மகப்பேறு மருத்துவமனையாக மீண்டும் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி, சேவா நகரில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட மகப்பேறு*

மருத்துவமனை, பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. வேளச்சேரி, தரமணி, கானகம், அம்பேத்கர் நகர், ஆதம்பாக்கம், பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளிலிருந்து ஏழை தாய்மார்கள் இம்மருத்துவமனைக்கு வந்து, மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் பெற்று, குறைந்த செலவில் குழந்தைகளைப் பெற்றுச் சென்றனர். இந்த மருத்துவமனை, சிறந்த மருத்துவக் கருவிகள், இயந்திரங்கள், படுக்கைகள் மற்றும் generators வசதிகளோடு இயங்கி வந்தது. தற்போது இதில் ஒரு சிறு பகுதிதான் சுகாதார மையமாகச் செயல்பட்டு வருகிறது. மீண்டும் அங்கு மகப்பேறு மருத்துவமனை இயங்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் விருப்பம். ஆனால், அடையாறில் மகப்பேறு மருத்துவமனை செயல்படுவதால், இங்கு மகப்பேறு மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, அந்த மருத்துவமனையிலே இருக்கும் மருத்துவக் கருவிகள், உபகரணங்கள், இயந்திரங்கள், படுக்கைகள், generators போன்றவை பயன்படுத்தப்படாமல் அப்படியே இருக்கின்றன. பொதுவாக, ஒரு தொகுதியிலே இலவச மருத்துவ முகாம் நடத்துவது என்றால், சமுதாயக் கூடம் அல்லது கல்யாண மண்டபத்தில்தான் நடத்துகிறோம். இந்த மருத்துவமனையில் எல்லா வசதிகளும் இருக்கின்றபொழுது--எனக்குத் தெரிந்த மருத்துவர்கள் மற்றும் நண்பர்கள் எல்லாம் கேட்கிறார்கள்--இலவச மருத்துவ முகாம் நடத்துவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். பூட்டிக் கிடக்கின்ற அந்த மருத்துவமனையின் கதவு திறக்கப்பட வேண்டும் என்ற எனது கோரிக்கையை இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களும் கேட்டுக் கொண்டிருக்கின்றார். இங்கேயே, இதே அவையிலே அந்த மருத்துவமனையை திறந்து, இலவச மருத்துவ முகாம் நடத்துவதற்கு நீங்கள் அனுமதி தந்தால் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைத் தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி

விரிவாக்கம் செய்யப்பட்ட போது, ஏற்கெனவே 10 மண்டலங்களாகச் செயல்பட்டு வந்த பகுதிகளை 7 மண்டலங்களாகக் குறைத்து, விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியில் 8 மண்டலங்களை புதிதாகச் சேர்த்து 15 மண்டலங்களாக மாற்றியமைக்கப்பட்டது. தேசிய நகர்ப்புற சுகாதார கழகத்தின் வழிகாட்டுதலின்படி 50,000 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையம் (Urban Primary Health Centre) என்ற அடிப்படையிலும்; 5,00,000 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர சமுதாய நல மையம் (Urban Community Health Centre) என்ற அடிப்படையிலும் மாற்றியமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சியில் வேளச்சேரி சேவா நகர், இளங்கோ நகர் மற்றும் சாந்தோம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த மகப்பேறு மருத்துவமனைகள், தேசிய நகர்ப்புற சுகாதாரக் கழகத்தின் வழிகாட்டுதலின்படி, அடையாறு மண்டலத்தில், எண் 2, வெங்கட்டரத்தினம் நகர், அடையாறு என்ற முகவரியில் செயல்பட்டு வரும் 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

வேளச்சேரி, சேவா நகர் பகுதியில் செயல்பட்டு வந்த மகப்பேறு மருத்துவமனை தற்போது நகர ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை செயல்பட்டு வரும் இந்த மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும், ஒரு பகுதிநேர சுகாதார செவிலியரும், 4 நகர சுகாதார செவிலியர்களும், ஓர் அலுவலக உதவியாளரும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களைத் தவிர, ஓர் ஆய்வகப் பரிசோதகர், செவிலியர் மற்றும் ஆலோசகர் ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 160 புற நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அடையாறிலுள்ள நகர சமுதாய நல மையம் 40 படுக்கை வசதிகளுடன் மகப்பேறு பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு ஆகியவற்றுடன் அனைத்து நவீன வசதிகளையும் கொண்டு 108 ஆம்புலன்ஸ் வசதியுடன் 24 மணிநேரமும் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் ஒரு மகப்பேறு மருத்துவர், ஒரு மயக்கவியல் மருத்துவர், ஒரு குழந்தை நல மருத்துவர், ஒரு பொது மருத்துவர், செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள், ஆய்வக பரிசோதகர், மருந்தாளுநர் மற்றும் ஆலோசகர் உள்ளிட்ட பல பணியாளர்கள்

2017 ஜூலை 3]

பணியாற்றி வருகின்றார்கள். இம்மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு மருத்துவமனை வளாகத்திலேயே இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளன. இந்தக் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்ட பிறகு தாய்-சேய் நல பிரிவுடன் மற்ற மருத்துவப் பிரிவுகளுக்கான சேவைகளும் ஏற்படுத்தித் தரப்படவுள்ளன. மேலும், தற்போதுள்ள 40 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனை, 70 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. இந்த 24 மணிநேர மருத்துவமனையின்மூலம் சுற்று வட்டாரப் பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு மருத்துவ வசதிகள் முழுவதுமாக நிறைவு செய்யப்படும். மண்டலத்திற்கு ஒரு 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனை என்ற அடிப்படையில்தான் இம்மருத்துவமனை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிகபட்சமாக 3 முதல் 4 கிலோ மீட்டர் distance *தான் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள கருவிகள் அனைத்தும் பயன்படுத்தப்படாமல் இருப்பதாகத் தெரிவித்தார். அந்தக் கருவிகள் அனைத்தும் கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 160 புற நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அனைத்து கருவிகளும் கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது என்னவென்றால், அந்தக் கருவிகள் அனைத்தும் பயன்படாமல் இருக்கின்றன. அதைத் திறந்து வைத்தால், இலவச மருத்துவ முகாம் நடத்துவதற்கு டாக்டர்களும், மற்ற பணியாளர்களும் வருகை புரிவார்கள் என்பதால், அனைத்துவிதமான சிகிச்சையையும் மக்கள் இலவசமாகப் பெறுவதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்து, திருவான்மியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அடையாறு மண்டலத்திலேயே இங்கு மட்டும்தான் ஆயுர்வேதா, சித்தா, யோகா, யுனானி மற்றும் ஹோமியோபதி

போன்ற பல பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அங்கே ஒரு Dialysis centre அமைக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். அங்கே இட வசதி மற்றும் அறைகள் குறைவாக இருக்கின்றன. அதைச்சுற்றி அரசு நிலம் காலியாகவுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டடத்தை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று மக்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டடத்தை விரிவுபடுத்தித் தருவாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நகர்ப்புற சுகாதாரக் கழகத்தின் வழிகாட்டுதலின்படி மாற்றியமைக்கப்பட்டது என நான் ஏற்கெனவே தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருவிகள் அனைத்தும் செயல்படாமல் இருப்பதாகக் கூறினார். இப்போது எனக்கு வந்த தகவலின்படி, அவை அனைத்தும் 24 மணிநேரம் செயல்படுகின்ற அடையாறு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு விட்டதாகவும், பயன்பாட்டில்தான் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருவிகள் செயல்படாமல் இருப்பதாகச் சொல்வதால் அதுகுறித்து, உடனடியாக ஆய்வு செய்து, கருவிகள் செயல்படாமல் இருந்தால், அவை செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி காலியிடங்கள் இருப்பதாகவும், கட்டடத்தை விரிவுபடுத்தித் தர வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

2017 ஜூலை 3]

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே நூற்றுக்கணக்கான மக்கள் மகப்பேறு மருத்துவமனையினை பயன்படுத்துவதாகக் கூறினார்கள். உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள், வாழ்க்கையின் அடித்தட்டில் இருக்கின்ற மக்கள் பெருமளவிற்கு மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனையினைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்கள் மீது அக்கறை கொண்டு அனைத்து மருத்துவமனைகளையும் அவர் ஆய்வு செய்தால், கிட்டத்தட்ட 50 விழுக்காடு அளவிற்கு அம்மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லை என்பது தெரியும். ஒரு மருத்துவரே மூன்று, நான்கு மருத்துவமனைகளுக்கு காலை, மதியம், மாலை என்று செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. நூற்றுக்கணக்கான ஏழைத் தாய்மார்கள் இந்த மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனையினைத்தான் நம்பியிருக்கிறார்கள். அவர்கள் மாதந்தோறும் உடல் பரிசோதனைக்கு வரும்போது அங்கு மருத்துவர்கள் இல்லாததால் செவிலியர்கள்,* attenders *பரிசோதிக்கின்ற ஒரு நிலை இருப்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஏழை கர்ப்பிணிப் பெண்களைக் காப்பாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்த மகப்பேறு மருத்துவமனைகளையும் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதில், பிரசவம் பார்ப்பது மட்டும்தான் அடையாறில், தொடர் சிகிச்சை அனைத்தும் சேவா நகர் மருத்துவமனையில்தான் நடந்துகொண்டிருக்கின்றது. சேவா நகர் மருத்துவமனையில் சிறு சிறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சை, நீரிழிவு நோய் மற்றும் இரத்தக்கொதிப்பு போன்ற நோயினைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல், மலேரியா, டெங்கு உட்பட அனைத்துவகை காய்ச்சல்களுக்கு சிகிச்சை அளித்தல், பெண்கள், குழந்தைகள்*

மற்றும் புறநோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், கர்ப்பகால பரிசோதனைக்கான தேதியை, online மூலம் பதிவு செய்தல் இவை அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறார்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி போடுதல், இரத்த அழுத்தம் மற்றும் எடை பார்த்தல் ஆகியவற்றுடன் ஆய்வுக்கூட பரிசோதனைகளான இரத்த வகைகளைக் கண்டறிதல், Hemoglobin பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, நீரிழிவு நோய் மற்றும் கர்ப்பகால இரத்த அழுத்த பரிசோதனை ஆகிய அனைத்தும் செய்யப்படுகின்றன. அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் இல்லை என்று சொன்னார்கள். தற்போதுகூட 84 மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் எடுக்கப்பட்டு பணிபுரிந்துகொண்டிருக்கிறார்கள். வேறு எங்கும் மருத்துவர்கள் இல்லை என்றால், வாரா வாரம் நடைபெறும் மாநகராட்சி மருத்துவர்கள் ஆய்வுக் கூட்டத்தின்போது எங்களது கவனத்திற்கு வரும். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரோடும் இணைந்து கூட்டம் நடத்தியிருக்கிறோம். அவர்களும் எங்களுக்குத் தேவையான அளவிற்கு உதவி செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றது. இதனை ஒரு பாலிசியாகத்தான் எடுத்துள்ளார்கள். அனைத்து இடங்களிலும், மண்டலத்திற்கு ஒன்று என்று இருக்கின்றது. சமுதாய நலக் கூடமாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, ஏதேனும் ஓரிடத்தில் மருத்துவர்கள் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால், அவசியமிருப்பின் அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

114—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***10962—திரு. இரா. சந்திரசேகர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—